අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ යොමුව / எனது இல. / My Ref. | ED/03/53/02/15/VT(Gen)-2024 | ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. | | දිනය / திகதி / Date | 2024.06. 20 |

சுற்றுநிருப இலக்கம் : 23/2024

மாகாணக் கல்விச் செயலாளர்கள்,

மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,

வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,

உயர் தர தொழிற் பாடத்துறை நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலை அதிபர்கள்

**உயர் தர தொழிற் பாடத்துறை மாணவர்களது தொழிற் பயிற்சியினை பாடசாலைகளூடாக கண்காணிப்பதை கட்டாயமாக்குதல்.**

உயர் தர தொழிற் பாடத்துறையின் *(13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி வேலைத்திட்டம்)* தரம் 13 மாணவர்கள் தொழிற் பயிற்சியில் ஈடுபடும் காலப் பகுதியில் (நிலையத்தில் பயிற்சி மற்றும் தொழிலில் பயிற்சி/ பயிலுனர் பயிற்சி) மாதாந்தம் ஒரு தடவை உரிய நிறுவனத்திற்கு சென்று மாணவர்கள் தொடர்பில் முழுமையாக கண்காணிப்பது பாடசாலைகளின் கட்டாயமான பொறுப்பாகும் என்பதை வலியுறுத்துகின்றேன்.

2. மாணவர்கள் தொழிற் பயிற்சியை ஆரம்பிக்க முன்னர் பாடசாலையினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை செய்தல் வேண்டும்.

   i. உரிய தொழிற் பயிற்சி நிலையம், விடுதிகளுக்கு சென்று அவை பாடசாலை மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கும் மற்றும் தங்குவதற்கும் பொருத்தமானவையா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

   ii. மாணவர்களை தொழிற் பயிற்சிக்காக அனுமதிக்கும் போது பாடசாலை ஆசிரியர் ஒருவருடன் அவர்களை அனுப்பிவைத்தல்.

3. தொழிற் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளும் சகல மாணவன்/ மாணவியும் உள்ளங்கும் வகையில் பாடசாலையின் ஆசிரியர் ஒருவரால் மாதாந்தம் தொழிற் பயிற்சி நிலையம்/ தொழில் நிலையத்திற்கு சென்று கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உள்ளடங்கும் வகையில் பயிற்சி செயற்பாடுகள் உட்படலாக அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கண்காணிப்பது கட்டாயம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

   i. மாணவர்களது கல்வி முன்னேற்றம் மற்றும் மாணவர் அறிக்கைப் புத்தகங்கள் *(Trainee's Progress Record Book)* போன்றவற்றை முறையாக பேணுதல்.

   ii. மாணவர்களது நாளாந்த வரவு.

   iii. இடைவிலகும் *(Dropout)* சாத்தியக்கூறுடன் கூடிய மாணவர்களை இனங்காணல்.

   iv. மாணவர்களது சுகாதார பாதுகாப்பு மற்றும் நலன் பேணல் போன்றனவற்றை முறையாக உறுதிப்படுத்திக் கொள்ளல்.



CamScanner

v. கற்றல் சூழல் பாதுகாப்பானதாகவும் விடுதிகள் சிறந்த நிலையிலும் காணப்படல்

vi. மாணவர்களின் ஒழுக்கம், நடத்தை, முனைப்புடனான பங்கேற்பு தொடர்பில் ஆலோசகர்கள் மற்றும் நிலையத்தின் ஏனைய உத்தியோகத்தர்களது கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளல்.

4. மாதாந்த கண்காணிப்பின் போது பூரணப்படுத்த வேண்டிய அறிக்கையின் மாதிரி இணைப்பில் தரப்பட்டுள்ளது.

5. மாதாந்தம் கண்காணிப்பில் ஈடுபடும் ஆசிரியர்களது வரவுச் சான்றிதழை பாடசாலையினால் தயாரித்து உரிய நிறுவன்ங்களின் பொறுப்பதிகாரிகளூடாக வரவினை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என்பதுடன், அவ் ஆசிரியர்கள் கல்வி அமைச்சின் 26/2020 சுற்றுநிருபத்திற்கமைவாக உரிய கொடுப்பனவுகளையும் பெறுக்கொள்ள முடியும்.

6. இச் சுற்றுநிருபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் உட்படலாக மாதாந்த கண்காணிப்பு செயற்பாடுகளை ஆசிரியர்களது நேரசூசியில் உள்ளடக்குவது அதிபரின் பொறுப்பாகும்.

7. பாடசாலையினால் கண்காணிப்புக்குரிய கால அட்டவனைகள், அறிக்கைகள் மற்றும் உரிய தகவல்களை பேணிவரல் வேண்டும்.

8. பயிற்சியிலிருந்து இடைவிலகும் *(Dropout)* சாத்தியக்கூறுடன் கூடிய மாணவர்களை இனங்கண்டு, அவர்களுக்கு பொருத்தமான ஆலோசனைகளை வழங்குவதற்கும், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை தீர்ப்பதற்கும், இடைவிலகலை *(Dropout)* தடுப்பதற்கும் உரிய பாடசாலைகளால் நடவடிக்கையெடுக்கப்படல் வேண்டும்.

9. மாணவர்களது பயிற்சியுடன் தொடர்புடைய பிரச்சனைகளை தொழிற் பாடத் துறைக்காக நியமிக்கப்பட்டுள்ள தொழிற் பயிற்சி நிறுவன ஒருங்கிணைப்பாளரைத் தொடர்புகொண்டு அறியப்படுத்தி, தேவையான சந்தர்ப்பங்களில் அப் பிரச்சனைகள் மற்றும் அப் பிரச்சனைகளை திர்ப்பது தொடர்பில் பாடசாலையின் பரிந்துரையினை வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் கல்வி அமைச்சின் உரிய உத்தியோகத்தர்களுக்கு அறியத்தரல் வேண்டும்.

ஜே. எம். திலகா ஜயசுந்தர
செயலாளர்

பிரதிகள் :

1. மாகாணப் பிரதம செயலாளர்கள்
2. கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர்கள்
3. கல்வி அமைச்சின் பிரதம நிதி உத்தியோகத்தர்கள்

CamScanner

உயர் தர தொழிற் பாடத்துறை

(பதின் மூன்று வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி வேலைத்திட்டம்)

தொழிற் பயிற்சி – மாதாந்த கண்காணிப்பு அறிக்கை

A. உரிய வருடம் மற்றும் மாதம்: ..............................................

B. கண்காணிப்பு மேற்கொண்ட திகதி: ..............................................

C. கண்காணிக்கும் ஆசிரியரின் பெயர்: ..............................................

D. கண்காணித்த பயிற்சி நிறுவனம்: ..............................................

E. கண்காணித்த நிலையம்: ..............................................

| 1. பாடநெறி | 2. பாடநெறி முன்னேற்றம் (மிக்க நன்றி. நன்று நடுநிலை திருப்திகரமானதாக இல்லை) | 3. மாணவரின் பெயர் | 4. மாணவரின் கல்வி முன்னேற்றம் (மிக்க நன்றி. நன்று நடுநிலை திருப்திகரமானதாக இல்லை) | 5. மாணவர் அறிக்கைப் புத்தகம் (முறையாக பூரணப் படுத்தப்பட்டுள்ளது பூரணப்ப் படுத்தப்படவில்லை | 6. வரவு ( 80% 60% - 80% 40% - 60% 40% ) | 7. இடைவிலகள் ஆபத்து (ஆபத்து இல்லை நடுநிலை அதிகம்) |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |



CamScanner

8. மாணவர்களது சுகாதார பாதுகாப்பு மற்றும் நலன் பேணல்

..............................................................................................................

9. கற்றல் சூழல் மற்றும் விடுதிகளின் நிலைமை

..............................................................................................................

..............................................................................................................

10. தீர்க்கப்படவேண்டிய பிரச்சனைகள் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படவேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள்

..............................................................................................................

..............................................................................................................

11. பரிந்துரை மற்றும் அபிவிருத்திக்கான முன்மொழிவுகள்

..............................................................................................................

..............................................................................................................

12. வேறு

..............................................................................................................

..............................................................................................................

F. ஆசிரியரின் கையொப்பம்: ..............................................

G. திகதி: ..............................................



CamScanner